



ஈரோடு வடக்கு மாவட்டம் டி.என்.பாளையத்தில் செம்மொழி நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு அகில இந்திய அளவிலான பெண்கள் கபாடி போட்டி டி.என்.பாளையம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.சிவபாலன் ஏற்பாட்டில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வெற்றி பெற்ற ஐ.பி.எம். சென்னை அணிக்கு கோப்பையும், முதல் பரிசாக 1 லட்சத்து 103 ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கினார். நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாஜலம், கழக நெசவாளரணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், டி.என். பாளையம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் கே.கே.சண்முகம், வாணிபுத்தூர் பேரூராட்சி தலைவர் சிவராஜ், துணைத்தலைவர் கதிர் (எ) கருப்புசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.கே. சுப்பிரமணியம், வாணிபுத்தூர் பேரூர் கழக செயலாளர் சேகர் (எ) பழனிச்சாமி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# முரசொலியே ஒரு வரலாறு!

## பேரா. சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிடச் செய்தி!

**1942** ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் வெளிவந்து கொண்டிருக்கின்ற ஒரு ஏடு 'முரசொலி' என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அது வெறும் ஏடன்று. அதைக் கொண்டு வருவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் எத்தனைப் போராட்டங்களைச் சந்தித்திருக்கிறார் என்பதைப் பார்த்தால்; அதுவே ஒரு வரலாறு என்று தோன்றும்.

1942 ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் 'முரசொலி' வெளிவந்தது என்றாலும் அது வெறும் துண்டறிக்கையாகத்தான் வந்தது. அதையும் கூட தொடர்ந்து நடத்த முடியவில்லை.

பிறகு 1948 ஆம் ஆண்டிலிருந்து வந்தது.

நின்று போன முரசொலி 1954 ஆம் ஆண்டிலிருந்து வார இதழாக வந்தது.



பேராசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

அது எப்போது நாளேடாயிற்று.?

பெரியார் பிறந்த நாளில்; அதுவும் பெரியாரை விட்டுப் பிரிந்திருந்த நேரத்தில் தி.மு.க.வில் இருந்த நேரத்தில் கலைஞர் அவர்கள், பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் நாள் அன்று தான், 1960 ஆம் ஆண்டு, முரசொலியை ஒரு நாளேடாக நடத்தத் தொடங்கினார்.



ஒவ்வொரு கட்டத்திலும் அவர் சந்தித்த சிக்கல்கள் பல!

அது துண்டறிக்கையாக வருகிற போது கூட அதில் வந்த செய்திக்காக சிதம்பரத்திற்கு கூட்டத்திற்கு வரக் கூடாது என்று கலைஞருக்கு காவல் துறை தடை விதித்தது.

பிறகு வார ஏடாக ஆன பிறகு முகவர்கள் பணம் தரவில்லை.

எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து, சந்தித்துத்தான் முரசொலி இன்றைக்கும் வெளிவந்துக் கொண்டிருக்கிறது!

### 596 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு

# அரியலூர் மாவட்டத்தில் ரூ.46.11 கோடி மதிப்பிலான கடனுதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், ஜீன் 17 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கி கடன் இணைப்பு வழங்கும் அரசு விழாவின் நேரலை அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு பார்வையிட்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 596 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.46.11 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பொ. இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக்குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி, கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுய சார்புதன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகிய இரண்டு திட்டங்களை அரியலூர் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசு 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) உதவியுடன் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்கத் தொடங்கியது. மகளிர் முன்னேற்றத்திற்காக, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில் துவங்கப்பட்ட இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு தற்போது சமூக பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகளை உருவாக்கி முறையாக பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்கி வங்கி கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தி வருகிறது. தற்போது மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி அரியலூர் மாவட்டத்தில் ஊரக பகுதியில் 2025-26 ஆம் ஆண்டு ஊரக மற்றும் நகரப்பகுதியில் உள்ள சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி நேரடி கடன் 6,129 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.547 கோடி இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டத்தில் தற்போது வரை 754 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.75.29 கோடி இலக்கீடு அடையப் பெற்றுள்ளது.

அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கி கடன் இணைப்புகள் வழங்கியதை தொடர்ந்து, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அரியலூர் மாவட்டத்தில் ஊரக / நகர்ப்புர பகுதிகளில் செயல்பட்டு வரும் 454 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.45.29 கோடி மதிப்பிலான வங்கி நேரடி கடன் தொகையும், வட்டார வணிக வள மைய தொழில் கடன் 107 மகளிர் சுய உதவிக்குழு பயனாளிகளுக்கு ரூ.52.60 இலட்சம் கடன் தொகையும் மற்றும் தொழில் முனைவோர் கடனாக 35 பயனாளிகளுக்கு ரூ.29.68 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.46.11 கோடி மதிப்பில் கடன் தொகையை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மகளிர் சுய உதவிக்குழுவை சேர்ந்த முத்தமிழ்ச்செல்வி என்பவர் தெரிவிக்கையில், எனது சொந்த ஊர் அணிக்குறிச்சி கிராமம். இன்றையதினம் எங்களது சுய உதவிக்குழுவிற்கு ரூ.12 இலட்சம் கடனுதவி தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. இக்கடனுதவியை கொண்டு எங்கள் குழு உறுப்பினர்கள் சுய தொழில் மேற்கொள்ள உள்ளோம். இதன் மூலமாக எங்களது பொருளாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள முடியும். எங்கள் சுய உதவிக்குழுவிற்கு கடனுதவி அளித்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி என முத்தமிழ்ச்செல்வி என்பவர் தெரிவித்தார்.

இதேபோன்று திருமதி. சீதா என்பவர் தெரிவிக்கையில், நான் தா.பழூர் ஒன்றியம், காடுவெட்டாங்குறிச்சி கிராமத்திலிருந்து வருகிறேன். நாங்கள் ரோஜா மகளிர் சுய உதவிக் குழுக்களாக செயல்பட்டு வருகிறோம். தற்போது எங்கள் குழுவிற்கு தமிழ்நாடு அரசு சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாடுகள் வளர்ப்பு மற்றும் ஆடுகள் வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள உள்ளோம். எங்களைப்போன்று கிராமப் பகுதியில் உள்ள பெண்களுக்கும் இதுபோன்று கடனுதவிகள் வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி என சீதா என்பவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்து கிருஷ்ணன், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், கூட்டுறவுத்துறை மண்டல இணைப்பதிவாளர் உமா மகேஸ்வரி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சங்கர சுப்ரமணியன், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் கோவிந்தராஜ், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, அரியலூர் வட்டாட்சியர்முத்துலெட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய பொறுப்பாளர் ஆர். கலியபெருமாள், நகர செயலாளர் இரா.முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், இதர அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத்தினர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதனையடுத்து அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ – மாணவிகளுக்கு உபகரணங்களை தெற்கு ஒன்றிய செயலாளர் பி.ஜி. அழகுவேல் வழங்கினார். இந்நிகழ்வில் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# அரியலூர் எஸ்.சிவசுப்பிரமணியன் 6 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## அரியலூர், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர் புகழஞ்சலி செலுத்தினர்!

அரியலூர், ஜுன் 17 -

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள தேவனூர் கிராமத்தில் முன்னாள் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் எஸ்.சிவசுப்ரமணியன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், ஆலத்தூர் ஒன்றிய கழக செயலாளர் என். கிருஷ்ண மூர்த்தி,

கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்கள்.

இந்நினைவு நிகழ்ச்சியில் எஸ்.எஸ்.சிவகுமார், மாநில ஆதிதிராவிடர் துணை அமைப்பாளர் ப.துரைசாமி, மாவட்ட மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சந்திரசேகர், லதாபாலு, அரியலூர் மாவட்ட ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், ரெ.அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், தனவேல், தெய்வ.இளையராஜா, பொன்.செல்வம், நா.கணேசன், இரா.அண்ணாதுரை, இ.பி.ஆர்.செந்தில்குமார், அருண், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர்கள் மதியழகன், சி.ராஜேந்திரன்,

நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி,

இரா.முருகேசன், பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், பொதுக் குழு உறுப்பினர்கள் இரா. பாலு, ஆர்.எம்.அன்பழகன், வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அமைப்பாளர்கள் கே.சி.லூயி கதிரவன்,

எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், தங்கை.எழில்மாறன், விஜயலட்சுமி செல்வராஜ், பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், ஒன்றிய துணை செயலாளர் காளமேகம், தலைமை கழக பேச்சளர்கள் கவிஞர் வீரமுரசு, இளஞ்செழியன், பழ.புனிதம், கழக வழக்கறிஞர்கள் செல்ல.மணிமாறன், எம்.ராஜா, முத்தமிழ் செல்வன்,

ஆ.கதிரவன், மோகன் ராஜ், ஆ.சசிகுமார், கதிரவன், பாலா, முன்னாள் நகர மாணவரணி அமைப்பாளர் இரா.சுர்ஜித், முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், நகர இளைஞரணி அமைப்பாளர்ச.விக்னேஷ். தோ.மு.ச. நிர்வாகிகள் டி.சேகர், பி.வி.அன்பழகன், கொளஞ்சி, ஹென்றி, குமார், செல்வம், கணேசன், பட்டுசெல்வம், சுப்ரமணியன், கழக நிர்வாகிகள் இராஜமாணிக்கம், ஞான பிரகாசம், முரசொலி குமார், வீ.கொளஞ்சி யப்பா, கு.பிரபாகரன், மா.செ. செந்தில்குமார்,

அறிவழகன், பாலா, செந்தில்குமார், செல்வகுமார், கருணாநிதி, செல்வகுமார், ஆசை.அன்பு, ராமராஜன், ரமணி, ஆனந்த், நட ராஜன், குமரவேல், வெற்றிவேலன், இதயத்துல்லா, காசிநாதன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக கழக நிர்வாகி கள் பலரும் கலந்து கொண்டு முன்னாள் எம்.பி. எஸ். சிவசுப்பிர மணியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.

## 34வது வட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, ஜுன் 17 –

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்கு பகுதி, 34 வட்ட தி.மு.க. பாக முகவர்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் 14.06.2025 அன்று கொடுங்கையூர் பாலாஜி திருமண மண்டபத்தில் வட்ட செயலாளர் கே.வி.ராஜன் தலைமையில் பகுதி செயலாளர் அ.முருகன் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின் பாகம் வாரியாக உறுப்பினர்களின் பெயர் மற்றும் கைபேசி எண்களை கேட்டு உறுதி செய்து கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் தயாளன் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மாமன்ற உறுப்பினர் ஷர்மிளா காந்தி, பகுதி கழக நிர்வாகிகள் ஜியாவுதீன், செந்தூர் பாண்டியன், லீலா வேலு, லதா மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.டி.சேகர் வர்மா, என்.நந்தகோபால், வட்ட கழக நிர்வாகிகள் யுவநாதன், சத்தியேந்திரன், முத்தரசன், சுமதி, ராஜகோபால், போத்தி, குமரேசன், தினகரன், யூசுப் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை கணபதி ராமசுப்பையா
### ஜுன் 17 (2006)



கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் 'தனது தலைவர் கலைஞர்தான்' என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**